ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2258/18 - 2021 දෙසැම්බර් මස 14 වැනි අඟහරුවාදා - 2021.12.14

2258/18 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

**ஆறாம் அட்டணையின் 10 ஆம் பந்தியின் கீழான அறிவித்தல்**

2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) மற்றும் (உ) விடயங்களினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் ஹேரத் முதியன்சேலாகே விஜய சந்திரதிலக பண்டார ஆகிய நான், இவ் அறிவித்தல் மூலம், ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கு அட்டவணை 1 இன் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான உள்ளூர் பெறுமதி சேர்ப்பை கணக்கிடும் முறைமையையும் 2 ஆம் அட்டவணையிலுள்ள ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் 2 ஆம் உப பந்தியின் (உ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கு பதிவுகள், மூல ஆவணங்கள் மற்றும் அடிப்படை ஆவணங்களின் பராமரிப்பின் தேவைப்பாடுகளையும் இத்தால் குறிப்பிடுகின்றேன்.

**ஹேரத் முதியன்சேலாகே விஜய சந்திரதிலக பண்டார,**
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு,
2021, திசெம்பர் 13.

1A - G 35563 - 15 (2021/12)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை 1

1. **உள்ளூர் பெறுமதி சேர்ப்பானது பண்டங்களை விற்பனை செய்யும் ஆட்களினால் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.**

**(அ) ஆட்களினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களை விற்பனை செய்யும் அவ் ஆட்கள்,**

(i) இந்த உப பந்தியின் (ii), (iii) மற்றும் (iv) ஆம் விடயங்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய ஆட்கள், அந்த வரி மதிப்பீட்டாண்டின் உடன் அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் உண்மைத் தொகைகளைப் பயன்படுத்தி, பின்வரும் சமன்பாட்டின் அடிப்படையில் நடப்பு மதிப்பீட்டாண்டிற்கு உள்ளூர் பெறுமதி சேர்ப்பை கணிப்பீடு செய்ய தேவைப்படுத்தப்படுகின்றனர்.

கருத்தில் கொள்ளப்பட்ட வரி மதிப்பாண்டிற்கு இலங்கையில் உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்களுக்கு இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கான உள்ளூர் பெறுமதி சேர் வீதம் $= \frac{E \times 100}{A}$

இங்கே

| | |
|---|---|
| 'E' | ஆனது A - (B+C+D) இற்கு சமமாகும் மற்றும், |
| 'A' | ஆனது ஏற்புடைய பண்டங்களின் விற்பனையின் மொத்த பெறுமதி ஆகும்; மற்றும் |
| 'B' | ஆனது அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மொத்த செலவினம் ஆகும்; மற்றும் |
| 'C' | அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றதும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் உள்ளூர் விநியோகத்தர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதுமான அத்தகைய மூலப்பொருட்களின் மொத்த செலவினம் ஆகும்; மற்றும் |
| 'D' | அத்தகைய பண்டங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் அரசுரிமைப் பணம், வட்டி, முகாமைத்துவக் கட்டணம் அல்லது தலைமை காரியாலய செலவினங்கள் அடங்கலாக ஏதேனும் சேவையின் மொத்த செலவினம் ஆகும். |

(ii) விடயம் (i) இல் குறிப்பிட்டுள்ள சமன்பாட்டின் தேவைப்பாட்டிற்காக, பெற்றொல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவ பெற்றோலிய எரிவாயு என்பவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(iii) ஏதேனும் சேவை அல்லது மூலப்பொருள் அந்த நபரின் அனைத்து வியாபார நடவடிக்கைகளுக்கும் பொதுவாக பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய சேவையின் செலவினம் அல்லது மூலப் பொருளின் செலவினத்தின் மொத்தமானது மேலே கணிப்பீட்டின் தேவைப்பாட்டிற்காக, ஏற்புடைய பண்டங்கள் அல்லது சேவைகளின் வருமான புரள்வின் அடிப்படையில் பிரித்தல் வேண்டும்.

(iv) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வெளியீட்டு வரியாக அறவிடப்படும் அல்லது உள்ளீட்டு வரியாக கழிக்கப்படும் பெறுமதி சேர் வரி மேலே கணிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படுதல் ஆகாது.

(ஆ) உப பந்தி (அ) இன் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்ப்பு 65% இலும் குறைவாக காணப்படின் அல்லது ஏற்புடைய பண்டமானது உடன் முன்னைய வரி மதிப்பீட்டாண்டின் போது, அந் நபரினால் உற்பத்தி செய்யப்படாதிருப்பின், அத்தகைய நபர், அத்தகைய பண்டங்கள் தொடர்பில் நடப்பு வருடத்தின் தொகைகளைப் பயன்படுத்தி, மேலே உப பந்தி (அ) இல் வழங்கப்பட்ட அத்தகைய

பண்டங்களுக்கு உள்ளூர் பெறுமதி சேர்ப்பினை கணிப்பதற்கு அனுமதிக்கப்படுவார் என்பதுடன் அத்தகைய பெறுமதி சேர்ப்பு கணிப்பீடானது, இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கு அவ்வாறே காணப்படும்.

எவ்வாறாயினும், முன்னைய வரிமதிப்பீட்டாண்டிற்கு விண்ணப்பிக்கப்பட்டதும் மேற்கூறப்பட்ட உபபந்தி (அ) இன் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்ப்புக்கு கருத்தில் கொள்ளப்பட்ட ஏதேனும் பண்டங்களுக்கும் இந்த உப பந்தி ஏற்புடையதாகாது.

**(இ) வேறு எவரேனும் ஆட்களினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பண்டங்களை விற்பனை செய்யும் ஆட்கள்.**

அத்தகைய ஆட்கள் ஏற்புடைய பண்டங்களுக்கு சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொண்டால், இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கு, மேலே (அ) அல்லது (ஆ) உப பந்தியில் உள்ளவாறு உள்ளூர் பெறுமதி சேர்ப்பு வீதத்துடன் உற்பத்தியாளரிடம் இருந்து உறுதிப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உறுதிப்பாடானது, ஏற்புடைய பண்டங்களை உற்பத்தி செய்யும் ஆளினாலும் அத்தகைய பண்டங்களை விற்பளை செய்யும் ஆளினாலும் வரி உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் கூற்றாக கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்த உப பந்தியின் கீழ் இந்நொரு ஆளுக்கு ஏதேனும் உறுதிப்பாட்டை வழங்கிய எவரேனும் ஆள், இவ் உற்பத்தியின் உள்ளூர் பெறுமதி சேர்ப்பு கணிப்பீட்டிற்கான பதிவுகளை பராமரித்தல் வேண்டும்.

**2. உள்ளூர் பெறுமதி சேர்ப்பானது, சேவைகளை வழங்கும் ஆட்களினால் (பண்டங்களுடன் கலந்த மற்றும் தொகுக்கப்பட்ட சேவைகள் அடங்கலாக) பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்.**

**(அ) பண்டங்களுடன் கலந்த சேவைகள் மற்றும் தொகுக்கப்பட்ட சேவைகள் அடங்கலாக சேவை வழங்கும் ஆட்கள்.**

(i) இந்த உப பந்தியின் (ii), (iii) (iv) மற்றும் (v) ஆம் விடயங்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய ஆட்கள், உடன் முன்னரான வரிமதிப்பீட்டாண்டின் உண்மை தொகைகளை பயன்படுத்தி பின்வரும் சமன்பாட்டின் அடிப்படையில், நடப்பு வரி மதிப்பீட்டாண்டிற்கு உள்ளூர் பெறுமதி சேர்ப்பை கணிக்க தேவைப்படுத்தப்படுகின்றனர்.

கருத்தில் கொள்ளப்பட்ட வரி மதிப்பீட்டாண்டிற்கு வழங்கப்பட்ட சேவைக்கு இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்கு உள்ளூர் பெறுமதி சேர் வீதம் $= \frac{E \times 100}{A}$

இங்கு:

| | |
|---|---|
| 'E ' | ஆனது A - (B+C+D) இற்கு சமனாகும் மற்றும், |
| 'A ' | ஆனது ஏற்புடைய சேவையின் மொத்த சேவை வருமானமாகும் மற்றும், |
| 'B ' | ஆனது அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மொத்த செலவினம் ஆகும்; மற்றும் |
| 'C ' | அத்தகைய சேவைக்கு பயன்படுத்தப்படுகின்றதும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களை இறக்குமதி செய்யும் உள்ளூர் விநியோகத்தர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதுமான அத்தகைய மூலப்பொருட்கள் எவையேனும் இருப்பின் அவற்றின் மொத்த செலவினம் ஆகும்; மற்றும் |
| 'D ' | அத்தகைய சேவை வருமானம் தொடர்பில் இலங்கைக்கு வெளியே ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் அரசுரிமைப் பணம், வட்டி, முகாமைத்துவக் கட்டணம் அல்லது தலைமை காரியாலய செலவினங்கள் அடங்கலாக ஏதேனும் சேவையின் மொத்த செலவினம் ஆகும். |

(ii) விடயம் (i) இல் குறிப்பிட்டுள்ள சமன்பாட்டின் தேவைப்பாட்டிற்காக, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவ பெற்றோலிய எரிவாயு என்பவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(iii) ஏதேனும் சேவை அல்லது மூலப்பொருள் அந்த நபரின் அனைத்து வியாபார நடவடிக்கைகளுக்கும் பொதுவாக பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய சேவையின் செலவினம் அல்லது மூலப் பொருளின் செலவினத்தின் மொத்தமானது மேலே கணிப்பீட்டின் தேவைப்பாட்டிற்காக, ஏற்புடைய பண்டங்கள் அல்லது சேவைகளின் வருமானப் புரள்வின் அடிப்படையில் பிரித்தல் வேண்டும்.

(iv) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வெளியீட்டு வரியாக அறவிடப்படும். அல்லது உள்ளீட்டு வரியாக கழிக்கப்படும் பெறுமதி சேர் வரி மேலே கணிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படுதல் ஆகாது.

(v) வேறுபட்ட சேவைகளை ஒரு நபர் வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்கும் வெவ்வேறாக அந்நபரினால் உறப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவினங்களை அடையாளம் காணக்கூடியதாக இருப்பின், அத்தகைய நபரானவர், ஏற்புடைய ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியாக கணிப்பீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) உப பந்தி (அ) இன் கீழ் கணிக்கப்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்ப்பு 65% இனை விட குறைவாகவோ அல்லது வரிமதிப்பாண்டிற்கு உடன் முன்னைய வரிமதிப்பீட்டாண்டின் போது அந்த நபரினால் ஏற்புடைய சேவை வழங்கப்பட்டிருக்காவிடின், அத்தகைய நபர் அத்தகைய சேவை தொடர்பிலான நடப்பு வருடத்தின் தொகைகளைப் பயன்படுத்தி, மேலே உப பந்தி (அ) இல் ஏற்பாடு செய்துள்ளவாறு அத்தகைய சேவை தொடர்பிலான தொகைகளை கணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதுடன், அத்தகைய பெறுமதி சேர்ப்பு கணிப்பீடானது, இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (இ) ஆம் விடயத்தின் தேவைப்பாட்டிற்காகவும் மேலோங்கி காணப்படும்.

எவ்வாறாயினும், இந்த உப பந்தியானது எந்தவொரு முன்னைய வரிமதிப்பீட்டாண்டிற்கும் உப பந்தி (அ) இன் கீழ் உள்ளூர் பெறுமதி சேர்ப்பை கணிப்பீடு செய்ய கருதப்பட்ட சேவை தொடர்பில் பிரயோகப்படமாட்டாது.

**அட்டவணை 2**

இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உப பந்தியில் வழங்கப்பட்டவாறு மேலதிக கழிப்பனவுகளை கழிக்க உத்தேசித்துள்ள நபரினால் பின்வரும் ஆவணங்களும் பதிவுகளும் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

1. இச் சட்டத்தின் 15 அ பிரிவின் கீழ் கழிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவினங்களின் பட்டியல் கீழ்வரும் வடிவமைப்பில்

| செலவினத்தின் திகதி | செலவினம் உறப்பட்ட பண்டங்கள் அல்லது சேவையின் வர்த்தகப் பெயர் | செலவினம் உறப்பட்ட பண்டம் அல்லது சேவையின் இயல்பு | விலை பட்டியல்/ சிட்டையின் இலக்கம் | செலுத்துநர் | பெறப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் இயல்பு | செலுத்திய தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

2. கீழ்வரும் வடிவமைப்பில், இச் சட்டத்தின் ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உப பந்தியின் கீழ் மேலதிக கழிப்பனவுகளுக்கு கருத்தில் கொள்ளப்படாத சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவினங்களின் (ஆறாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் (2) ஆம் உப பந்தியின் (அ) மற்றும் (ஆ) விடயங்கள்) பட்டியல்.

| செலவினத்தின் திகதி | செலவினம் உறப்பட்ட பண்டங்கள் அல்லது சேவையின் வர்த்தகப் பெயர் | செலவினம் உறப்பட்ட பண்டம் அல்லது சேவையின் இயல்பு | விலை பட்டியல்/ சிட்டையின் இலக்கம் | செலுத்துநர் | பெறப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் இயல்பு | செலுத்திய தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

3. இவ் வரி மதிப்பீட்டாண்டிற்கான இணையாளர்களின் நிரல்.

4. ஒவ்வொரு பண்டம் அல்லது சேவைக்கு அட்டவணை 1 இற்கு அமைவாக உள்ளூர் பெறுமதி சேர்ப்பை கணித்தமைக்கான பணித்தாள்கள்.

5. ஒவ்வொரு செலவினமும், விநியோகத்தரின் பெயர், விநியோகத்தரின் முகவரி, விநியோகத்தரின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம், வழங்கப்பட்ட சேவை நோக்கின் விபரம், கட்டணம் மற்றும் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை குறிப்பிட்டு உடன்படிக்கை / ஒப்பந்தத்தினால் ஆதாரமளிக்கப்படுதல் வேண்டும்.

6. அனைத்து செலவினங்களும் வழங்கப்பட்ட சேவைகளை தெளிவாக விவரித்து ஏற்புடைய விலைப்பட்டியல்/ வரிப் பட்டியலால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலே 5 இல் குறிப்பிட்டவாறு உடன்படிக்கை/ஒப்பந்தத்துடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

EOG 12 - 0139